# பரதீஸும் திருடனும்

1. இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்களில் ஒருவன், இயேசு தம்முடைய ராஜ்யத்தில் வரும்பொழுது தன்னை நினைத்தருள வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டான். இயேசு அவனுக்கு மறுமொழியாக அவன் தம்முடன் பரதீசில் இருப்பானென்று சொன்னார். லூக் 23:42, 43.

2. "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலே செய்யப்படுவதாக", என்று ஜெபிக்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களுக்குப் போதித்தார். அதிலிருந்து, பூமியின் மீது அவர் ஆளுகை செய்யும் ராஜ்யம் பின்வரும் காலத்திற்குரியதென அவர் தெரிவித்ததை அறிகிறோம். வரப்போகிற இந்த ராஜ்யத்தைப் பற்றி இயேசுவும் அவருடைய சீஷர்களும் திரும்பத் திரும்ப விரிவாய் பிரசங்கித்து வந்ததினால், இந்தக் கள்ளனும் மற்ற ஜனங்களும் சாதாரணமாய் அதைப்பற்றி அறிந்திருந்தார்கள். பூமி முழுவதிலும் நடைபெறப்போகிற நீதியும், சமாதானமும் நிறைந்த இந்த ஆட்சி சீக்கிரமாய் ஸ்தாபிக்கப்படும் என்று வேதத் தீர்க்கத்தரிசனங்கள் காண்பிக்கின்றன - தானி. 2:35,44; 7:13,14,18,27; சக.14:9; ஆகா.2:7; எபி.12:27,28; ஏசா9:6,7; 2:2-4; எரேமி 3:17.

## பரதீஸ்

3. வேதபுத்தகத்தில் "சிங்காரத்தோட்டம்" என்று பொருள்படும் "பரதீஸ்" என்ற வார்த்தை மூன்று வகைகளில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அவையாவன (1) அது "தேவனுடைய தோட்டமாகிய" ஏதேன் தோட்டம் (ஆதி 2:8-15; எசேக் 28:13); வெளி 2:7யை ஆதி 3:22, 24யோடு ஒப்பிட்டு படிக்கவும். அது ஆதாமும், ஏவாளும் பாவமற்ற நிலையிலிருக்கையில் அனுபவித்த சம்பூரணமான வாசஸ்தலத்தைக் குறிக்கிறது. (2) பரலோகத்திலுள்ள தேவனுடைய வாசஸ்தலத்தைக் குறிக்கிறது. (வெளி 2:7); (3) தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட பின்பு பாவமும் மரணமும் பூமியை விட்டு அதிகமதிகமாய் ஒழிக்கப்படுகையிலும் அவைகள் ஒழிக்கப்பட்ட பின்பும் ஏற்படும் ஏற்படும் பூமியைக் குறிக்கிறது. (வெளி 22:1-3; ஆதி 2:9,10ஐ ஒப்பிட்டுப் பார்; 1கொரி 15:26). அது அதிகமதிகமாய் விரிந்து (தானி 2:35) "ஏதேன் தோட்டத்தைப்போல ஆகிறது (எசேக் 36:35). அதாவது, இழந்து போன பரதீஸ் திரும்பவும் கிடைக்கப்பெற்ற பரதீஸ் ஆகிறது. இது புதிய பூமி என்று அழைக்கப்படுகிறது. இதுவே மனிதர் அடையும் சம்பூரண வாசஸ்தலம்.

இந்தப் புதிய பூமி, தரிசனத்திலும், தீர்க்கத்தரிசன வாக்கிலும் கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஆட்சியாகிய மூன்றாம் வானமான புதிய வானத்தோடு கூட சம்பந்தப்பட்டதாய் அமைந்திருக்கிறது. (2கொரி. 12:1-4; 2பேது 3:6,712,13; வெளி 21:1-3) - கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஆட்சி, இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தானுடைய ஆவிக்குரிய ஆட்சியை அகற்றி அதை ஒழித்து (2கொரி. 4:4; கலா 1:4; எபே 2:2). அதுவோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். (1கொரி 15:24-26; தானி 2:35,44).

4. வேதபுத்தகம் தெரிவிக்கிற இந்த மூன்று பரதீஸ்களில் முதலாம் பரதீஸ் இயேசுவின் மரணத்துக்கு வெகு காலத்துக்கு முன்பே அழிந்து போயிற்று; மூன்றாம் பரதீஸ் இன்னும் வருங்காலத்திற்குரியதாகவே இருக்கிறது. ஆகவே இரண்டாம் பரதீஸ் மாத்திரம் இயேசு மரித்துப் போனபொழுது நிலைத்திருக்கிறது. ஆனால் அவருடைய மரணத்துக்குப் பின்னான மூன்றாம் நாளிலே தாம் இன்னும் அங்கே போகவில்லை என்று சொன்னார் (யோவா 20:17). அன்றியும், அதன்பின் நாற்பது நாளளவும் வேதவாக்கியங்களின்படி அவர் அங்கே போகவில்லை. அப் 1:3-11.

## இன்றைக்கு

5. “இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” என்ற வசனத்தைச் சற்று தீர்க்கமாக ஆராய்வோம். இங்கு ஒரு காரியத்தை முக்கியமாக கவனிக்க வேண்டும். தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட அசல் எழுத்துச் சுவடிகளில் எந்த ஒரு நிறுத்தல் குறிகளான , ; : . அதாவது காற்புள்ளி (Comma - , ), அரைப்புள்ளி (Semicolon - ; ), முக்காற்புள்ளி (Colon - : ), முற்றுப்புள்ளி (Fullstop - . ) போன்றவைகள் உபயோகிக்கப்படவில்லை. வாசிப்போருக்கு உதவியாயிருக்கும்படி வழக்கத்திலிருக்கும் மேற்கண்ட நிறுத்தல் குறிகள் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரைக்கும் கண்டுபிடிக்கப்படவுமில்லை. அதுவரை எல்லா மொழிகளிலும் நிறுத்தல் குறிகள் இல்லாமலே எழுதப்பட்டு வந்தன.

6. அப்படியே கிரேக்க மொழியின் மூல புதிய ஏற்பாட்டில் லூக்கா 23:43ஆம் வசனம் எந்த நிறுத்தல் குறிகளும் இல்லாமல் கீழ்கண்டவாறு அமைந்திருக்கிறது. “And said to him the Jesus Indeed I say to thee today with me thou shalt be in paradise”. அதை அப்படியே அதே சொல்வரிசையின்படி தமிழில் மொழிபெயர்த்தால் அது கீழ்க்கண்டவாறு அமையும். “சொன்னார் அவனுக்கு இயேசு மெய்யாகவே நான் சொல்லுகிறேன் உனக்கு இன்றைக்கு

என்னுடனேகூட நீ இருப்பாய் பரதீசில்". இதில் இன்றைக்கு என்ற வார்த்தை 'மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன்' என்ற வாசகத்திற்கும், நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்' என்ற வாசகத்திற்கும் நடுவில் இருக்கிறதை கவனியுங்கள்.

7. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட நிறுத்தல் குறிகளை போடும்போது இன்றைக்கு என்ற வார்த்தைக்கு முன் காற்புள்ளியை (கமா Comma) போட்டு மொழிபெயர்த்து விட்டனர். அதன்படி 'மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்' என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் அமைந்திருக்கிறதைக் காண்கிறோம். இதில் இன்றைக்கு என்ற வார்த்தை 'நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்' என்ற வாசகத்தோடு சோர்ந்துவிட்டது. இதுவே இதனை வியாக்கியானப்படுத்தும் போது, மற்ற வேத உபதேசங்களோடு ஏற்படும் கருத்து முரண்பாட்டிற்கு காரணம். இதே வாசகத்தை ரோதர்ஹம் எம்பஸைஸ்ட் வேதாகமம் (Rotherham Emphasised Version) கொடுத்திருக்கிறதை இங்கு தருகிறோம்.



42 And he went on to say—
Jesus! remember me, whensoever thou shalt come into[h] thy kingdom.
43 And he said unto him—
|Verily| I say unto thee this day[i]:
|With me| shalt thou be in Paradise.
44 And it was already about the sixth hour, and |darkness| came upon the whole' land, until the

a Hos. x. 8.
b Cp. Is. liii. 12.
c Or: "kept saying."
d Ps. xxii. 18.
e Ps. xxii. 7.
f Ps. lxix. 21.
g Ml: "the different one." He differed greatly.
h Or (WH): "in."
i Or: "‖This day‖ |with me| shalt," &c.

6 [[ He is not here, but hath a
Remember how he spake u
he was in Galilee:
7 Saying |as to the Son of
That he must needs be
the hands of sinful men
And be crucified,—
And |on the third' day|
8 And they remembered hi
returning [from the tomb],

a Ps. xxxi. 5.
b Ps. lxxxviii. 8; xxxviii. 11.
c Ap: "Sabbath."

அதன்படி "நான் உனக்குச் சொல்லுகிறேன் இன்றைக்கு: நீ என்னுடன் கூட பரதீசிலிருப்பாய்". இங்கு இன்றைக்கு என்ற வார்த்தை நான் உனக்குச் சொல்லுகிறேன் என்ற வாசகத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறதைக் கவனிக்கிறோம். இது கருத்தமைதியைத் தருகிறது. ஆகவே இவ்வாக்கியம் வாசிக்கப்பட வேண்டிய விதமாவது: **"இயேசு அவனை நோக்கி, நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே நான் இன்றைக்கு உனக்குச் சொல்லுகிறேன் என்றார்"** என்பதாகும்.

8. நமது தமிழ் வேத புத்தகத்திலுள்ளபடி இவ்வாக்கியத்தை நாம் படிப்போமானால், அதாவது, இன்றைக்கு நீ என்னுடவே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று நாம் படிப்போமானால் அது, இயேசுவைப் பொய்யராக்குவதாயிருக்கும். ஏனெனில் அவர்கள் இருவரும் சிலுவையரையப்பட்ட அன்றைக்கே அவரோடுகூட கள்ளன் பரதீசிலிருப்பானென்று அவர் அவனுக்கு வாக்குக் கொடுத்தார் என்பதாக அவ்வாக்கியம் பொருள்படுகிறது. ஆனால் அவர் தாம் மரித்த அன்றைக்கு அங்கே போகமாட்டார் என்றும் (ஏசா 53:10,12) அவருடைய ஆத்துமா பாதாளத்தில் (ஏதீஸ் - மரண ஸ்திதியில்) இறங்க வேண்டும் என்றும் (அப் 2:30-32) அதிலிருந்து தாம் மூன்றாம் நாள் வரையும் உயிரோடேழுந்திருக்கமாட்டார் என்றும் நன்கு அறிந்திருந்தார்.(லூக் 18:33).

9. இன்றைக்கு என்ற வார்த்தையை "நான் உனக்குச் சொல்லுகிறேன்" என்ற வாசகத்துடன் சேர்த்துப் படிப்போமானால் அதாவது நீ என்னுடன் கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே நான் இன்றைக்கு உனக்குச் சொல்லுகிறேன் என்று நாம் சரியான மொழிபெயர்ப்பின்படி படிப்போமானால், அவ்வாக்கியம் எந்தவித ஆட்சேபத்தையும், குழப்பத்தையும், முரண்பாட்டையும் உண்டாக்காது. வாக்கியத்தின் கருத்து தெளிவாயிருக்கும். ஏனெனில் அந்த நாளில் இயேசு கள்ளனுக்கு ஒரு வாக்குத்தத்தம் மாத்திரம் அருளிச் செய்தார், என்றாலும் இயேசு தமது ராஜ்ஜியத்தில் வருமளவும் அந்த வாக்குத்தத்தம் அவனுக்கு நிறைவேறாது.

## உம்முடைய ராஜ்ஜியத்தில்

10. தன்னைப் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளும்படி கள்ளன் ஒருபோதும் இயேசுவைக் கேட்டுக் கொள்ளாதிருக்க, அதற்கு எதிராகச் சிலர் அவன் அப்படிக் கேட்டுக்கொண்டானென்று எண்ணுகிறார்கள் ஆனால் அது உண்மையல்ல. சிலுவையில் அறையப்பட்ட அன்றைக்குத் தன்னை நினைத்தருளும்படி கள்ளன் இயேசுவைக் கேட்காமல், பின்வரும் ஓர் காலத்தில், அதாவது அவர் தம்முடைய ராஜ்ஜியத்தில் வரும்பொழுது தன்னை நினைத்தருள வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டான்.

11. அதற்கு மறுமொழியாக இயேசு அவனை நோக்கி, "நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே நான் இன்றைக்கு உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். அதாவது, அவன் கேட்டுக் கொண்டபடியே அவர்

தம்முடைய ராஜ்ஜியத்தில் வரும்போது வேண்டுதல் அருளிச் செய்யப்படுமென்றும் இயேசு அவனுக்கு உறுதிமொழி கூறினார். மேலும், மேற்படி மறுமொழியில் “மெய்யாகவே” என் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது “ஆமென்” என்ற கிரேக்க வார்த்தையாகும். அதற்கு “அது அப்படியே ஆகும்” என்பது அர்த்தம். கள்ளனுடைய மன்றாட்டு, “ஆண்டவரே, உம்முடைய ராஜ்ஜியத்தில் வரும்பொழுது அடியேனை நினைத்தருளும்” என்பதே. இயேசுவின் மறுமொழி, “ஆம் அப்படியே ஆகும். நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று நான் இன்றைக்கு உனக்குச் சொல்லுகிறேன்” என்பதே. கள்ளன் கேட்டுக்கொண்டபடியே, இயேசு, தமது ராஜ்யத்தில் வரும்போது அது அப்படியே அவனுக்கு ஆகும் என்று இயேசு அவனிடம் கூறினார். (இயேசு **பூமியில் ஏற்படுத்தும் ராஜ்யம் பரதீசாக** இருக்கும் என்பதையும் அவர் தமது வாக்கின் மூலம் தெரிவித்தார்).

12. தேவ ராஜ்யம் இரண்டு பகுதிகளையுடையது. (எபே 1:9) அவையாவன: (1) மாம்சக் கண்களால் பார்க்கக் கூடாததும், ஆவிக்குரியதுமாகிய பரலோக பகுதி. அதாவது, இயேசுவும் அவருடைய மணவாட்டி என்றும், சிறு மந்தை என்றும் அழைக்கப்படுகிற அவருடைய சபையும் (வெளி 21:2; எபே 5:23-32; லூக் 12:32), திரள் கூட்டத்தார் என்று சொல்லப்படுகிற மணவாட்டியின் தோழிப்பெண்களும் (சங் 45:14,15; வெளி 7:9-17; 19:9) அடங்கியது. (2) கண்ணுக்குப் புலப்படுவதும் பூமிக்குரியதுமாகிய பகுதி, அதாவது, மூப்பரும் வாலிபருமாகிய விசுவாசிகளும் (எபி 11:39,40; மத் 11:11; யோவே 2:28) அந்தப் பகுதிக்குரிய குடிகளாகிய பொதுவான் மனுக்குலமும் (சங் 37:9-11, 22, 29, 34; ஆமோ 9:14,15; எபே 2:2-4; 26:9; 35:1-10; 60:3-14) அடங்கியது.

13. காணக்கூடாத பரலோக ராஜ்யமானது ஆயத்தப்படுத்தப்பட்ட ஜனங்களுக்காக உலகம் உண்டாவதற்கு முன்னமே (எபே 1:4,5; 1கொரி 2:7) ஆயத்தம் பண்ணப்பட்ட ஒரு இடம் (யோவா 14:1-3; 1கொரி 2:9; எபி 10:34) இந்த ஜனங்கள் யாரெனில், தன்னயத்தையும், உலகத்தையும் வெறுத்து, தங்களுடைய சிலுவைகளை எடுத்துக் கொண்டு, இயேசுவின் சீஷர்களாகி (மத் 16:24; லூக் 14:26,27), பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு (begotten - 1யோவா 5:1,18; 1பேது 1:3; யோவா 3:3-8) ஆவியின் கனிகளை அடைந்து அழியாமையையும் நித்திய ஜீவனையும் தேடி, நன்மை செய்வதில் பொறுமையோடே விடாமுயற்சியாயிருந்து (ரோம 2:7; கலா 5:22-25; எபி 12:14; யாக் 1:4; 2பேது 1:5-

11) இயேசுவின் அடிச்சுவடுகளை உண்மையாய்ப் பின்பர்ரினவர்கலேயாவார்கள். (1பேது 2:21; 1யோவா 2:6). இது உலகத் தோற்றத்துக்கு முன்னே தேவன் தம்முடையவர்களின் மகிமைக்காக ஏற்படுத்தினதும் மறைக்கப்பட்டிருந்ததுமான இரகசியமான பரம ராஜ்யமாகும்.

14. காணக்கூடிய பூமிக்குரிய தேவ ராஜ்யம் 1000 வருட யுக மத்தியஸ்தரின் ஆட்சியில் ஏற்படுகிறதாயிருக்கிறது. அவருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறதைப் போல பூமியிலும் செய்யப்படும் தேவராஜ்யம் இது. உலகம் உண்டானது முதல் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யம் இது. (மத் 25:34) அதில் பூச்சகரத்துக் குடிகள் நீதியைக் கற்று கொள்ளுவார்கள் (ஏசா 26:9; 2:2-4) அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்வார்கள் (செப் 3:9).இதுவே பரதீஸ் என்ற பூமிக்குரிய தேவ ராஜ்யம்.

15. தேவனிடம் தனக்குண்டான பக்தியையும், தான் செய்த பாவங்களுக்காக உண்மையான மனந்திரும்புதலையும் சாகும் தருவாயிலிருந்த கள்ளன் தெளிவாகக் காண்பித்ததை இயேசு நன்கு ம்தித்தபடியால் (லூக் 23:40,41), அந்த இருண்ட நாளில் அவனுடைய வேண்டுதலுக்கு இசைந்து, அவருடைய ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதியாகிய பரதீஸ் இருப்பானென்ற ஆறுதல் அளிக்கும் உருதிச்சொல்லை அவனுக்கு வழங்கினார். சாகும் தருவாயிலிருந்த கள்ளனுடைய மனந்திரும்புதல் ராஜ்யத்தின் பரலோக அல்லது ஆவிக்குரிய பகுதியில் ஓர் அங்கமாகிறதற்கு அவனைச் சரியாய்ப் பக்குவப்படுத்திக்கொள்ள அவனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

16. ராஜ்யத்தின் பரலோகப் பகுதியிலாவது அல்லது அதன் பூலோகப் பகுதியிலாவது ஓர் அங்கமாயிருக்கச் சிலாக்கியம் பெறும் எவரும் (மனஸ்தாபப்பட்ட கள்ளனுட்பட மரண நேரத்தில் மரித்த உடனே (உயிர்த்தேழுதலுக்குமுன்) மறுமைக்குரிய பலனைப் பெறுவார்கள் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணவில்லை; அவர்கள் மரண நித்திரையடைவார்களென்றும் (1இராஜா 2:10; தானி 12:2; யோவா 11:11-14,24; 1கொரி 15:6,18,20; 1தெச 4:13-17). இயேசுவின் இரண்டாம் வருகையில் உயிர்த்தெழுதலில் தங்கள் பலனையடைவார்களென்று தேவன் தமது வசனத்தில் தெரிவித்திருக்கிறார் யோவா 14:3; மத் 16:27; லூக் 14:14; 2தீமோ 4:8; 1பேது 1:7,13.

17. இயேசு தமது இரண்டாம் வருகையில் தம்முடைய ராஜ்யத்தில் வரும்பொழுது (லூக் 19:11) அவர் அளிக்கும் பலன் அவரோடு கூட வருகிறது (வெளி 22:12); மேலும் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்டு ஜீவனை அடையும் உயிர்தெழுதலையாவது, அல்லது நியாயத்தீர்ப்புக்குரிய உயிர்த்தெழுதலையாவது அடையும்படி புறப்படுவார்கள். **"...unto the resurrection of judgement"- ASV "unto a resurrection of judgement" –** ERV & Diaglott. ஏனென்றால் "நீதிமான்களும், அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு" - யோவா 5:28,29; அப் 24:15.

18. அப்பொழுது இயேசு மனஸ்தாபப்பட்ட கள்ளனை நினைத்தருளுவார். ஜீவனை அடையும்படிக்கான பரீட்சையை முன்பு அடைந்து கொள்ளாத அநீதிமான்களோடு கூட, ஆதாமினால் வந்த மரணத்திலிருந்து இந்தக் கள்ளனை இயேசு எழுப்புவார். ஏனெனில், இயேசு ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை அனுபவித்தார். (எபி 2:9;1யோவா 2:2); ஆயிர வருஷ நியாயத்தீர்ப்பு நாளிலே (2பேது 3:8) பூமியின்மீது அவர் அரசாட்சி செய்யுங் காலத்தில் (வெளி 5:10; 20:4,6) அவர் அவர்களுக்குச் சத்தியத்தை அறியும் அறிவையும் (எபி 8:11; ஆப 2:14; 1தீமோ 2:4) ஜீவனை அடையும்படிக்கான பரீட்சையையும் கொடுப்பார்; அப்பொழுது அவர் பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்த்து (அப் 17:31; சங் 96&98) பூமி முழுவதையும் ஓர் பரதீசாக ஆக்குவார்.(ஏசா 11:6-10).

19. இவர்களில் "விருப்பமுள்ளவனெவனோ" (வெளி 22:17) அவன் அப்பொழுது திறக்கப்படும் பரிசுத்த பெரும் பாதையில் பாத்திரவானாய் நடந்து, படிப்படியாய் மானிட பூரணத்தை அடைந்து கொள்வான். "அவர்கள் சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்" (ஏசா 35:8,10; 62:10); பாத்திரவாங்கலாய்க் காணப்படுவோர் அனைவரும், பரலோகத்தில் அல்ல, பூமியின்மீது பரதீசில் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் (மத் 25:31-46); அபாத்திரவான்களாய் கானப்படுகிரவர்களோ இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள் (ஏசா 65:20; வெளி 20:7-9; 21:8; சங் 145:20; ஏசா 60:12; அப் 3:23).